# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

<u>ஆணை நாள் - **03.06.2025**</u>

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண். SA 19115/SCIC/2023</u>**

திரு.A.பிரதாப், த/பெ.அப்பன்ராவ் மேல்முறையீட்டாளர்
எண்.60/742, கீழ அலங்கம்
தஞ்சாவூர் - 613 001.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
வட்ட சார் ஆய்வாளர், நில அளவை
வட்டாட்சியர் அலுவலகம் ....... பொதுஅதிகார அமைப்பு
தஞ்சாவூர்.

**<u>ஆணை</u>**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 07.07.2023 |
| 2. | மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் | 03.08.2023 |
| 3. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 03.08.2023 |
| 4. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 02.09.2023 |
| 5. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 01.11.2023 |
| 6. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 23.12.2024 |
| 7. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 22.02.2025 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / வட்டாட்சியர் அலுவலகம், தகவலறியும் உரிமைச் சட்டம், தஞ்சாவூர் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "பொருள் - சர்வே பிழைய சரி செய்து தர வேண்டி - தஞ்சாவூர் வட்டாட்சியருக்கு 21/03/2023 பதிவு அஞ்சலில் ஒப்புகை அட்டையுடன் குறைதீர் அப்பீல் மனு அளிக்கப்பட்டது - அம்மனுவை 22/03/2023 அலுவலகத்தில் பெறப்பட்டது - தொடர்பாக - மேற்சொல்லப்பட்ட மனுதாரரின் மனு பெறப்பட்ட நிலையில், அம்மனு பெறப்பட்ட நாளிலிருந்து RTI மனு சமர்ப்பிக்கும் நாள் வரை நாள் வாரியாக அதாவது (தினசரி) இம்மனு மீது இவ்வலுவலகத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் தகவல் விபரம் வழங்கவும்" என்பன போன்று 5 (ஐந்து) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (03/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. எனினும், மனுதாரர் 26/05/2025 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில்,விசாரணையை பிறிதொரு தேதிக்கு ஒத்திவைக்க கோரியுள்ளார். ஆணையத்தின் அழைப்பாணை ஏற்கனவே அனுப்பப்பட்டு பொதுத் தகவல் அலுவலர் ஆஜராகிவிட்டபடியால், மனுதாரரின் இறுதி நேர வேண்டுகோளை ஆணையத்தால் நிறைவேற்ற இயலவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு.கு.தினேஷ், வட்ட சார் ஆய்வாளர், நில அளவை, வட்டாட்சியர் அலுவலகம், தஞ்சாவூர் அவர்கள் ஆஜராகி ஏற்கனவே மனுதாரருக்கு 03/08/2023 தேதியிட்டு இனவாரியான தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர் தனது 22/02/2025 தேதியிட்ட ஆட்சேபணை கடிதத்தில், "*தஞ்சை நகரம் வார்டு எண்.3, பிளாக் எண்.16, நகர புல எண்.742-ல் அமைந்துள்ள வீடு அதனை ஒட்டியுள்ள வடபுறம் சந்தும் நீதிமன்ற தீர்ப்பு மூலம் உறுதி செய்யப்பட்டது. சந்தும், வீடும் சேர்ந்து 1071 சதுரடி கிரயப்பத்திரத்தில் கண்டபடி பட்டா வழங்கப்பட்டது. நீதிமன்ற தீர்ப்பின்படி 29/06/1995 பட்டா புலப்பட பிரதி (வத்சலா சுவீகாரத்தாய்-க்கு வழங்கப்பட்டதில் வீடும் வடபுறம் சந்தும் சேர்த்து 21 அடி காட்டப்பட்ட நிலையில் இச்சொத்து பிரதாப் பெயரில் செட்டில்மெண்ட் மூலம் மாற்றப்பட்ட நிலையில் 30/12/2022-ல் வழங்கப்பட்ட பட்டா புலப்படபிரதியில் வீடு 19 அடி, சந்து 2 அடி அளவு சேர்ந்து 21 அடி உள்ள நிலையில் சந்தின் அளவு மட்டும் 2 அடி சேர்க்காமல் சந்து வழங்கப்பட்ட புலப்பட பிரதியின் சர்வே விஸ்தீரண பிழையை நிவர்த்தி செய்யக் கோரி 21/03/2023-ல் மனு அளிக்கப்பட்டு 22/03/2023-ல் பெறப்பட்டுள்ளது* " இது தொடர்பாகவே மனுதாரர் தகவல் கோரியுள்ளார்.**

**3. இன்றைய விசாரணையின் போது ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் / வட்ட சார் ஆய்வாளர், நில அளவை, தஞ்சாவூர் வட்டாட்சியர் அலுவலகம் அவர்கள் தெரிவிக்கையில் மேற்குறிப்பிட்ட பிழை சரி செய்யப்பட்டு, அது தொடர்பான சரி செய்யப்பட்ட சான்றிதழும் 23/12/2024 தேதியிட்ட கடிதத்துடன் மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் கூறினார். பொதுத் தகவல் அலுவலரின் கூற்றினை ஆணையம் பதிவு செய்து ஏற்கிறது. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 19115/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
வட்ட சார் ஆய்வாளர், நில அளவை
வட்டாட்சியர் அலுவலகம்
தஞ்சாவூர்.

**மேல்முறையீட்டாளர்**

திரு.A.பிரதாப், த/பெ.அப்பன்ராவ்
எண்.60/742, கீழ அலங்கம்
தஞ்சாவூர் - 613 001.

RG/PC